முதன்மை சார்பு நீதிமன்றம், பழனி

O.S.No. 133/2023

தேதி : 27.11.2024

(வா.சா.1) – திரு.ஹுமாயூன் கபீர்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு 1–ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :

1. நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் சன் பார்மசி மருந்து கடை ஓம் சண்முகா தியேட்டர் அருகில் வைத்துள்ளேன். அந்த கடைக்கு உரிமையாளர் நான் மட்டும்தானா என்றால் ஆமாம். எத்தனை ஆண்டுகளாக பிரதிவாதி எனக்கு பழக்கம் என்றால் 5,6 ஆண்டுகளாக தெரியும். இதற்குமுன்பு பிரதிவாதியிடம் வரவு செலவு வைத்துள்ளேனா என்றால் இல்லை. பிரதிவாதி என்ன தொழில் செய்கிறார் என்றால் விவசாயம் மற்றும் பால் வியாபாரம். எப்படி எனக்கு அவர் பழக்கம் ஆனார் என்றால் எனது நண்பர் கனகசபாபதிமூலம் பழக்கமானார்.

2. பிரதிவாதியின் குடும்பத்தை பற்றி தெரியுமா என்றால் தெரியாது. நிலத்தரகராகவும் வேலை பார்த்து வருகிறேன் என்றால் இல்லை. நான் சொல்வது தவறு என்றும், நிலத்தரகராகவும் இருக்கிறேன் என்றும், அதன்மூலம் கமிஷன் பெற்று வருகிறேன் என்றால் சரியல்ல. அதன் அடிப்படையில் பிரதிவாதி தான் கிரையம் வாங்கிய சொத்தை விற்று தருவதற்காக என்னிடம் சொல்லியிருந்தார் என்றும், ஆனால் இதற்கிடையில் பிரதிவாதி மன்சூர் என்பவரிடம் கிரையம் உடன்படிக்கை எழுதிக்கொண்டார் என்றால் நான் கமிஷன் வேலை செய்யவில்லை, மன்சூர் என்பவரிடம் கிரையம் உடன்படிக்கை போட்டார்களா என்ற விபரம் எனக்கு தெரியாது.

3. கிரைய உடன்படிக்கை போட்ட விபரம் எனக்கு தெரியும் என்றும், எனவே நான் பிரதிவாதியிடம் எனக்கு அந்த சொத்தை கிரையம் செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டியிருந்தேன் என்றால் அது தவறு. அவ்வாறு எனக்கு பிரதிவாதி எழுதி தராததால் பிரதிவாதியிடம் தரகர் பணம் கேட்டேன் என்றால் சரியல்ல. இதை மனதில் வைத்து கொண்டு பிரதிவாதி மீது பொய்யான புரோநோட்டை உருவாக்கி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

4. அதன்பின்னர் என்னுடைய அறிவிப்பிற்கு பின்பு பஞ்சாயத்து தலைவர்

சின்னசாமி, அவுரங்கசீப், பாண்டி ஆகியோர் சேர்ந்து என்னிடம் பேச்சுவார்த்தை நடத்தி எதற்காக அறிவிப்பு அனுப்பப்பட்டது என்று என்னிடம் கேட்கப்பட்டது என்றும், அவ்விதம் இனிமேல் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கமாட்டேன் என்று சொன்னேன் என்றால் சரியல்ல. புரோநோட் எங்கு வைத்து எழுதப்பட்டது என்றால் சபாபதி என்பவர் முன்னிலையில் என்னுடைய மருந்து கடையில் எழுதப்பட்டது.

5. எழுதபோது யாரெல்லாம் உடன் இருந்தார்கள் என்றால் சபாபதி, சக்திவேல், நான் மற்றும் சாட்சிகள் அவர்கள் பெயர்கள் ஞாபகமில்லை. புரோநோட் எழுதியது யார் என்றால் தற்போது ஞாபகமில்லை, பார்த்தால்தான் சொல்லமுடியும். புரோநோட்டில் உள்ள கையெழுத்து பிரதிவாதியது அல்ல என்றும், வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. புரோநோட்டை அறிவியல் ஆய்விற்கு அனுப்ப தயாரா என்றால் தயார்.

6. புரோநோட்டை உற்பத்தி செய்துள்ளேன் என்றும், சாட்சிகள் மற்றும் அதை நபர்கள் விபரம் எனக்கு நன்கு தெரியும் என்றும், அவர்கள் பெயர் விபரம் சொன்னால் உண்மை விபரம் தெரியவரும் என்பதால் ஞாபகமில்லை என்று கூறுகிறேன் என்றால் சரியல்ல. எனக்கு வேண்டிய நபரை வைத்து புரோநோட்டை உற்பத்தி செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

ஒம்./– K.ரேணுகாதேவி
முதன்மை சார்பு நீதிபதி,
பழனி.